

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## கொந்தளிப்பில் "ஓர் நதி!" அங்கே தேவன் வாசம் செய்கிறார்!

நாம் சந்தித்திடும் "ஆபத்துக் காலத்தை" தேவனுடைய வார்த்தை மிகைப்படுத்தி.... பூமி நிலைமாறி! மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து! ஜலங்கள் கொந்தளித்து! பர்வதங்கள் அதிர்ந்து! என நேரிட்டாலும்.... என்றே கூறுகிறது (சங்கீதம்.46:2,3). ஆனால், அவருடைய பிள்ளைகளாய் வாழும் நம்மில் ஒருவருக்குகூட 'எந்த ஆபத்து காலமும்' இப்படி நேரிட்டதில்லையே! ஆகவேதான்.... இப்போது எதிர்கொண்ட கொடிய சூழ்நிலை எதுவாயிருந்தாலும் "தேவனை அடைக்கலமாய்" கொண்ட நாம் பயப்படுவதில்லை! எனவே 'கொந்தளிக்கும் கடல்' போன்ற நிலையிலும் நம் இருதயத்தில் 'அமைதியான நதி' ஓடுகிறது..... இதுவே தேவனுடைய நகரமாகிய இருதயத்தை மகிழச்செய்து.... அங்கே தேவன் வாசம் செய்வார்! நாம் அசைக்கப்படுவதில்லை! என சங்கீதம்.46:4,5 கெம்பீரிக்கிறது!

இன்னும் அதிகமாய், நம் ஆண்டவர் இயேசு நம்மை பாதுகாப்பதில் நம் "தலையிலுள்ள ஒவ்வொரு மயிரும்" எண்ணப்பட்டிருக்கிறது..... ஆதலால் பயப்படாதிருங்கள்! என்றல்லவா திடப்படுத்தியுள்ளார்! (மத்தேயு.10:30,31) அல்லேலூயா!

*-tr*

பெட்டகம் 20 | நவம்பர் 2018 | பரல்கள் 11



## மானிட நற்குணமல்ல, பிதாவின் சற்குணமே.... சுவிசேஷம்!

‘தன் சொந்த ஜீவனின்’ நற்குணத்தை ‘திவ்விய ஜீவனாக’ கருதி ஏமாறுவது நித்திய இழப்பன்றோ! ஆம், எந்த நன்மையான ஈவும் ‘‘ஜோதியின் பிதாவிடத்திலிருந்தே வந்திட முடியும்’’ (யாக்கோபு. 1:17).

கோதுமை மணிபோல், நிலத்தில் விழுந்து ‘சொந்த ஜீவன்’ சாகவில்லையென்றால், தனித்து நிற்கும் மண்ணின் ஜீவியமே எஞ்சியிருக்கும்! ‘விழுந்து செத்துவிட்டால்’ ..... பரத்தின் ஜீவன் வெளிப்படும் அற்புதம் நிகழ்ந்துவிடும்! இந்த உருமாற்றத்தில் விளைந்திடும் ‘‘தெய்வ சாயலை’’ நாள்தோறும் அடைந்து மறுரூபமடைவதே இயேசு கொண்டுவந்த சுவிசேஷத்தின் பாக்கியம்! (யோவான்.12:24,25).

இயேசுவை தரிசனத்தில் பார்த்தேன்! சொப்பணத்தில் கண்டேன்! என்ற மாயத்தின் பின்னணி ‘‘இயேசுவின் சாயலை’’ அடைந்திடும் பாக்கியத்தை கொள்ளையாட, பிசாசு கொண்டுவந்த தந்திரம் என அறியுங்கள்! தன்னை காண வந்த கிரேக்க ஞானியருக்கு ‘‘தரிசனம்’’ தர இயேசு மறுத்து ‘‘கோதுமை மணி நிலத்தில் விழுந்து செத்து..... இயேசுவின் சாயலை பெற்றிடும்’’ சுவிசேஷத்தையே அவர்களுக்கு அறிவித்து அனுப்பிவிட்டார்! (யோ.12:20-24). மண்ணின் சாயலை இழந்து தேவசாயல் (பிதாவின் சற்குணம்) காணும் எழுப்புதல், மீண்டும் தேவ ஜனத்திற்கு திரும்புவதாக! (மத்தேயு.6:48) ஆமென். *-Ed*

### 2019 ‘பரலோக பொக்கிஷங்கள்’

வருட சந்தா ரூ.**150/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **டிசம்பர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal

## நம்மை 'நியாயப்படுத்தாமல்' மன்னிப்பு கேட்க வேண்டும்

***ந**ம்முடைய ஆவியில் நொறுங்குண்டு ஏழ்மையில்லாதவர் களாயிருந்தால், சில தவறுகள் செய்ததை நாம் அறிந்தவுடன், அதை எல்லா தாழ்மையோடும் மன்னிப்பு கேட்பதற்கு, ஒன்று அக்கறையற்றிருப்போம் அல்லது தயங்குவோம்!*

*மனுஷர்களில் பெரும்பாலோனோருக்கு அதிக கஷ்டமான 'பத்து வார்த்தைகள்' உண்டு:* **"I am Sorry. That was my mistake. Please forgive me"** *அதாவது, "நான் வருந்துகிறேன். அது என்னுடைய தவறுதான். தயவுசெய்து என்னை மன்னியுங்கள்" என்ற வாக்கியங்களே ஆகும்.*

**'ஒரு நொறுங்குண்ட ஆவி இல்லையென்றால்' நாம் மன்னிப்பு கேட்கும்போது, நம்மை 'நியாயப்படுத்தவும்' செய்வோம்! மன்னிப்பு கேட்பதில் 'தன்னை நியாயப்படுத்தும்' யாதொன்று காணப் பட்டாலும், அது மன்னிப்பு கேட்டதாய் கருதப்பட முடியாது!**

*நம்முடைய மன்னிப்பு கேட்பதில் "ஒரு சிறிய தன்னை நியாயப்படுத்தும் வாசனை இருந்தாலும்" நாம் இன்னமும் நொறுங்கவில்லை என்பதை நிச்சயத்துக் கொள்ளலாம். தன்னை நியாயப்படுத்துவதை "பரிசேயர்களின் ஓர் அடையாளமாய்" இயேசு கூறினார் (லூக்கா.16:15).*

*நாம் செய்த ஒன்று, தவறு என உணர்ந்தால், அதை* **உடனடியாக** *ஏற்றுக்கொண்டு,* **உடனடியாக** *சரி செய்ய வேண்டும்! இவ்வாறு செய்வதற்கு நொறுங்குண்ட ஒரு மனிதனுக்கு யாதொரு சிரமமும் இருப்பதில்லை. நொறுங்காத ஒரு மனிதன் மாத்திரமே இந்த இரண்டு பகுதியையும் செய்வதற்கு தாமதிப்பான்! அப்படியே அவன் மன்னிப்பு கேட்டாலும், யாரோ சிலரை குற்றம் சாட்டவும் செய்வான்! ஆதாம் பாவம் செய்தபோது, விலக்கப்பட்ட கனியை, தான் புசித்ததை ஒத்துக் கொண்டான். ஆனால், அதை அவன் நியாயப்படுத்தி "தேவன் அவனுக்கு தந்த ஸ்திரீயே, தனக்கு அந்த பழத்தை தந்தாள்" என்றான். இவ்வாறாக, அவன் மனைவியை குற்றம் சாட்டினான்! இதுபோன்ற மனைவியை கொடுத்ததற்காக தேவனையும் குற்றம்*

சாட்டினான்! எந்த ஒரு பாவத்தையோ அல்லது தவறையோ அறிக்கைச் செய்வதற்கு இது சரியான வழி அல்ல!

**தாவீது தன் பாவத்தை சங்கீதம் 51-ல் எவ்வாறு அறிக்கைச் செய்தார் என்பதைப் பாருங்கள். அதில் 'தன்னை நியாயப்படுத்துதல்' சிறிது வாசனைகூட வீசவில்லை.**

அதுவே, மெய்யாகவே நொறுங்குண்ட மனிதனின் உண்மை அடையாளம். நீங்கள் யாவருமே 51-ம் சங்கீதம் முழுவதும் தியானித்து, மெய்யான நொறுங்குதலை அறிந்து கொள்ள தேவனைத் தேடுங்கள்! உங்கள் பாவங்களை எவ்வாறு அறிக்கை செய்ய வேண்டும்? என்பதையும் அறிந்துகொள்ள நாடுங்கள்!

மேலும், உங்களை நியாயப்படுத்துவதற்காக 'ஒரு பொய்' சொல்லும் நிலைகூட ஏற்படலாம். அந்த பொய் வெகு சிறிதான அளவில் 'மிகைப்படுத்தி பேசியோ' அல்லது உங்களை 'நல்ல வெளிச்சத்தில் காண்பிக்கும் பொருட்டு' சில நிகழ்ச்சிகளை மறைத்தோ .... இருந்திட முடியும். **ஒரு பொய் சொல்லுவது எளிது. ஆனால் 'ஒரே ஒரு பொய்' சொல்லுவது கடினம்!** ஏனென்றால் நீங்கள் ஒரு பொய் சொன்னவுடன், அந்த பொய்யை பாதுகாப்பதற்கு அநேக பொய்கள் சொல்ல நேரிடும்! நாம் பொய் சொல்வதை வெறுத்து, உண்மை பேசுதலையே முழு இருதயமாய் நாடவேண்டும். அப்படி இல்லை யென்றால், நம்முடைய அபிஷேகத்தை நாம் இழப்போம்! தேவன் நம் ஜீவியத்தின்மீது கொண்டிருக்கிற தயவுள்ள சித்தத்தையும் இழப்போம்! இதுவே நாம் தாங்கி கொள்ளக்கூடிய எந்த இழப்பையும் விட, ஒரு கொடிய இழப்பாகும்.

'சில பெருமைகளை' தேவன் நம்மிடத்தில் காணும்போது, அது வெளியரங்கமாக்கப்பட்டு அழிக்கப்படவே விரும்புகிறார். ஆகவே சில சிறிய சம்பவங்களை சம்பவிக்க அனுமதித்து 'அந்த இடறல் மூலம்' நம்மை தடுக்கி விழச்செய்து எச்சரிப்பார்! இதையே எசேக்கியேல்.3:20 வசனத்தில் "நீதிமான் திரும்பும்படி.... நான் அவன் முன் இடறலை வைப்பேன்" என ஆண்டவர் கூறினார்.

நாம் வீழ்ச்சி அடையும்போது, கீழ்கண்ட பரீட்சையின் மூலம் தேவன் நம்மை சோதிப்பார். (1) நம்மை விழச்செய்த 'பெருமையை' உணர்ந்து கொண்டோமா? (2) நம்முடைய பாவங்களை அறிக்கை செய்கிறோமா? (3) அவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துகிறோமா? (4)மனுஷருக்கு முன்பானவைகளை சரி செய்கிறோமா? ஆகியவை களேயாகும். இவ்வாறு நம்மை நியாயந்தீர்த்து செயல்படத் தொடங்கி விட்டால், நாம் நியாயந்தீர்க்கப்படுவதில்லை! ஆனால் நம்மை நாமே

*நியாயப்படுத்திக் கொண்டால், ஒரு நாளில், இந்த உலகத்தோடு ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவோம். நம்முடைய தவறுகளை* **'நேர்மையாய் ஒத்துக்கொள்ள'** *தேவன் விரும்புகிறார்!*

*ஆனால், அநேக மூப்பர்கள் தங்கள் தவறுகளை நேர்மையாய் ஒத்துக்கொள்வதில்லை. இது பெருமையினால் ஏற்படும் ஓர் சீரியஸான விஷயமாகும். இவ்வித நிலையில், அவருடைய ஊழியத்திற்கு யாதொரு கிருபையும் தரமாட்டார்! ஏனெனில், பெருமை யுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்!*

*தங்களை நியாயந்தீர்த்துக் கொள்பவர்களையும், தங்கள் பிழைகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்கிறவர்களையும் தேவன் அதிகமாய் மதிக்கிறார். ஒரு சகோதரன் என்னிடம் 'ஒரு பொய் சொல்வதை' நான் கண்டுவிட்டால், அல்லது தன்னுடைய பிழைகளை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு கேட்பதற்கு அக்கறையற்று இருப்பதை நான் காணும்போது, அந்த சகோதரன் மீது நான் எப்போதும் நம்பிக்கை இழந்து விடுகிறேன்!*

*நாம் எல்லோருமே தவறு செய்கிறோம். தேவன் ஒருவர் மாத்திரமே, ஒரு தவறும் ஒருபோதும் செய்ததில்லை. நாம் ஒரு தவறு செய்யும்போது, அதை ஒத்துக்கொண்டு, அதை உடனடியாக தேவனிடமும், நம் தவற்றினால் பாதிக்கப்பட்ட எல்லோரிடமும் அறிக்கை செய்திட வேண்டும்!*

> ***இவ்வாறு, நாம் பாதிக்கப்பட்ட சக விசுவாசிகளிடம், அந்த பாவத்தை அறிக்கை செய்வதின் மூலமாகவே, ஒரு மூப்பராயிருக்கும் நம்முடைய தாழ்மை சோதிக்கப்படுகிறது!***

*மூப்பர்களாயிருக்கும் நாம் யாவரும் ஒரு நல்ல கேள்வியை தங்களிடம் கேட்டுப் பார்த்திட வேண்டும். "நான் ஒரு தவறை அல்லது பாவத்தை, மற்றொரு சகோதரனிடம் நான் எப்போது கடைசியாக மன்னிப்பு கேட்டேன்?"*

*இவ்வாறு நாம் நேர்மையாக நம்முடைய பாவங்களை தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் அறிக்கைச் செய்தால் மாத்திரமே, "***உங்களுடைய பாவங்களை** *நான் ஒருபோதும் நினைவுகூர மாட்டேன்" என தேவன் நம்மிடம் கூறுவார் (எபி.8:12).*

*நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்: நம்முடைய கடந்த கால தவறுகள் மூலமாய், நாம் 'பாடங்களை' கற்றுக்கொள்ளக்கடவோம்! அப்படி இல்லையென்றால், அந்த பாவங்களை நாம் மீண்டும் செய்வோம்!*

*– சகரியா பூணன்*

## “அவர் பெலனின்றி, நான் ஒன்றுமில்லை!” என கண்டேன்

*என் கணவர் வாழ்ந்த பட்டணத்து வீட்டிற்கு முன்பாக, ஆரம்பத்தில் காலி வெறும் இடமாகவே இருந்தது. அங்கு சிற்றாலயம் அப்பொழுது கட்டப்படவில்லை. அது கட்டப்பட்டவுடன், என் வீட்டிற்கு அருகிலிருந்த சிற்றாலயத்திற்கு இரண்டு நிமிடத்திற்குள் அங்கு சென்று கர்த்தருடைய தியானத்திற்குள் மூழ்கி விடுவேன்! மேலும், சிற்றாலயம் கட்டப்படுவதற்கு முன்பாக என் கணவரின் அரண்மனையைச் சுற்றி காடுகளும் மரங்களுமே இருந்தன. ஆகவே, அந்த நாட்களில், கர்த்தரைத் தேடி ஜெபம் செய்வதற்கு, காட்டிற்குள் சென்று விடுவேன்! அவ்வாறு ஜெபித்திடச் சென்ற நேரங்களில், கொடிய* **விஷப்பாம்புகளையும், காட்டு விலங்குகளையும்** *சந்தித்திருக்கிறேன். கர்த்தரோ, என்னைத் தமது செட்டையின் நிழலின் கீழ்வைத்து முற்றிலுமாய் பாதுகாத்துக் கொண்டார். சில சமயங்களில் நான் ஜெபிக்கும்படி முழங்கால்படியிட்ட இலை சருகுகளின்கீழ் விஷப்பாம்புகள் அமைதியாய் படுத்திருந்தன. நான் கர்த்தரோடு கொண்ட தியானத்தை விட்டு எழுந்தவுடன், அந்த பாம்புகள் என் முழங்கால் அடியிலிருந்து ஓடுவதைக் கண்டு திகைத்துப்போனேன்! அந்த விஷப்பாம்புகள், நான் அதன்மேல் முழங்கால்படியிட்ட வலியை தாங்கிக் கொண்டு, என்னைத் தாக்காமல் பொறுமையா யிருந்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. மற்றொரு சமயம், என் ஜெப வேளையில் ஒரு பெரிய காட்டு எருமை என்னை முறைத்து வாலை முறுக்கி நின்று சீறியது. அதை கண்கொட்டாமல் நான் பார்த்துக் கொண்டிருக்க, அந்த காட்டெருமை என்னைத் தாக்காமல், பின்னோக்கி அடி எடுத்து வைத்து ஓடிவிட்டது. இவ்வாறு நான் கூறி, தேவனுடைய பாதுகாப்பை விவரிப்பதற்கு, அநேக நிகழ்ச்சிகள் எனக்கு உண்டு! அது அனைத்தும் நம்ப முடியாத ஆச்சரியங்கள்!*

**இவ்வாறு, ஒப்பற்ற பாதுகாப்பை தேவன் எனக்கு அருளிய நிகழ்ச்சிகளுக்கு, இந்த உலகில் நன்றியும், பிரதிஉபகாரமும் செலுத்துவதற்கு இணையாக என்னிடத்தில் யாதொன்றும் இல்லையே! என மனம் பொங்கினேன்!**

*தாங்க முடியாதது போன்ற துயரங்களில், அவரே தனது ஞானத்தையும், பொறுமையையும், வல்லமையையும் தந்து ஆதரிக்கிறார். ஆம், அவர் ஒருவரே அவ்வித பரத்தின் ஈவுகளைத் தர வல்லவர்! நான் கண்டு அனுபவித்தது எல்லாம், அவர் என்னை ஆதரிப்பதை நிறுத்தி விட்டால் அல்லது என்னை தனியே விட்டு*

*விட்டு போவதைப்போல் சென்றுவிட்டால், என் முழு பெலனையும் நான் இழந்து விடுவேன், என்றே எண்ணினேன்! அது ஒருவேளை, இந்த உலகத்திலுள்ள ஒரு பெலவீனமான ஐந்துவைவிட 'அதிக பெலவீனம்' எனது பங்காயிருக்கும்! நான் சந்தித்த துயரங்கள் அனைத்தும்* **"நான் யார்?"** *என்பதை எனக்கு காட்டியது. அதற்கு நேர்மாறாக அதுபோன்ற துயரத்தின் நடுவில் அவர் எனக்கு காண்பித்த தயவுகள்* **"அவர் யார்?"** *என்ற மகத்துவத்தை எனக்கு காட்டியது! இவ்வித அனுபவங்கள் என்னை முன்நின்று நடத்தி "நான்* **அவரை முற்றிலும் சார்ந்துகொள்ள** *வேண்டிய அவசியத்தை" எனக்குள் ஆழமாய் பதித்து வைத்தது!*

*– மேடம் குயான்*

---

## இன்று, சத்தியத்திற்கு சாட்சிகள் எங்கே?

***ச****த்தியம், ஜீவியத்தை புறக்கணித்து விட்டால்* (Truth divorced from Life)..... *வேத உணர்வின்படி, அது சத்தியமேயல்ல! நீங்களே யோசித்துப் பாருங்கள்..... "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற சத்தியத்தை ஒருவன் அறிந்து கொண்டால், இந்த அறிவு எந்த விதத்தில் மேன்மையென கூற முடியும்? சத்தியத்தைக் குறித்த இந்த அறிவை, பிசாசும் அறிந்து வைத்திருக்கிறான்! ஆகாப்.... ஏன், யூதாஸ்காரியோத்து கூட அறிந்து வைத்திருக்கிறான்! அதுபோலவே, "நம்முடைய மீட்பிற்காக தேவன், தன் ஒரேபேறான குமாரனையே, மானிடர்களாகிய நமக்காகத் தந்தருளினார்" என்ற சத்தியத்தை நீங்கள் அறிந்திருந்தால், அதினால் என்ன மேன்மையுண்டு? நரகத்தில் வாசமாயிருக்கும் பல இலட்சம் மக்களுக்கு கூட இந்த சத்தியம் தெரியுமே!*

*வேதாகம போதகத்தின் சத்தியங்களுக்கு ஒருவன் கீழ்படியும் வரை, அதில் யாதொரு பிரயோஜனமும் இல்லை. வேதாகமத்தின் எல்லா உபதேசங்களுக்கும் பின்னால், ஜீவிய சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது! இதை நாம் யாவரும் அறிந்துகொள்வோமாக!*

*ஒருவனுக்கு ஓரளவு பிரசங்கிக்கும் திறன் இருந்தால் கூட, தன் பிரசங்க திறனால், ஒரு சிறு கூட்டத்தை கூட்டிவிட முடியும். மேலும், பல்வேறு கவர்ச்சியான உபதேசங்களைப் பிரசங்கித்து விட்டு..... ஜனங்களின் தவறுகளை சுட்டிக்காட்டாமலும், சரிசெய்ய வேண்டிய பகுதிகளைச் சொல்லாமலும் இருந்துவிட்டால், அந்த சபையில் இருக்கும் மக்கள் உள்ளம் மகிழ்ந்து, அந்த சபையில் திருப்தியாய் நீடித்த நாட்களாய் அமர்ந்திருப்பார்கள்!*

**இதற்கு பதிலாக சத்தியத்தைப் பேசும் ஒரு பிரசங்கி, அதை கேட்பவர்களின்**

**ஜீவியத்தோடு உணர்த்தி பேசத்தொடங்கி விட்டால்.... அந்த உத்தம பிரசங்கிக்கு 'கடின வாழ்வே' பாதையாக அமையும்.... ஆனால், பரத்தின் மகிமையோ வெகு பிரகாசமாயிருக்கும். பின்தங்கிச் செல்லும் இன்றைய சபைக்கு இதுபோன்ற தேவ மனிதர்களே அவசரமாய் தேவைப் படுகிறார்கள்!**

*இதைக்குறித்து பவுல் கூறும்பொழுது "உங்களுக்குத் தெரிந்திருக்கிறப்படி முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு, நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்" என 1தெச.2:2-ம் வசனத்தில் கூறினார். நாம் எவ்வளவு பெலவீனமாயிருக்கிறோமோ, அதைவிட தேவன் அவ்வளவு பெலன் கொண்டவர்! என நினைவு கூர்வது நம் யாவருக்கும் நல்லது. இந்த சத்தியதை, நானும் பவுலைப் போலவே"தேவனுக்குள் தைரியப்படுத்திக் கொண்டேன்!"*

**ஆகிலும், தேவனோடு பேசுவதற்கு பழகியவன் மாத்திரமே இவ்வித தைரியம் பெற்றிட முடியும்! நான் மனுஷரோடு பேசுவதை விட தேவனோடு அதிகம் பேசுவதை பழக்கமாக்கிக் கொண்டேன். நீண்ட கான்பரன்ஸில் கலந்துரை செய்வதை விட, தேவனோடு அதிகமாய் போராடி கலந்துரை செய்கிறேன்!**

*அதுபோன்ற சமயத்தில்தான், நான் ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே, நான் செய்ய வேண்டுமென்று அறிந்த 'இதை' நான் செய்வேனென்றால்..... நான் பேச வேண்டுமென்று உணர்ந்த 'ஒன்றை' நான் பேசுவேனென்றால்..... என் கர்த்தாவே, ஜனங்களிடமிருந்தும், சபையாய் இருக்கிற குழுக்களிடமிருந்தும் எனக்குத் தொந்தரவு வரும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்!" என தேவனோடு பேசினேன். இக்கட்டான இந்த வேளையில், நான் மனகிலேசமடைந்து தொடர்ந்து ஆண்டவரிடம் பேசத் தொடங்கினேன். "ஆண்டவரே, நான் மீண்டும் உம்மிடம் இது குறித்து பேசுகிறதற்காய் வருந்துகிறேன்! என் விசுவாசத்திற்கு நான் நேர்மையான உறுதி கொண்டு நிற்கும்போது ஏராளமான துன்பங்கள் எனக்கு வரும் என்பது மாத்திரமல்லாமல்..... இந்த சூழ்நிலையில், பிசாசும் என் மீது விரோதம் கொள்வான்! எனவும் கலக்கமடைகிறேன்" இவ்வாறு நான் மீண்டும் மீண்டும் தேவனிடத்தில் மறுவி, பேசிய பின்பு, என் உள்ளத்தில் ஓர் திடமான உறுதி ஏற்பட்டது! இப்போது, என் தளர்ந்த கால்களை நிமிர்த்தி வைத்து நின்றேன்! ஆண்டவரை நோக்கிப் பார்த்து.....*

**சர்வ வல்ல ஆண்டவரே, என் கண்களுக்கு முன்பாக தெளிவாய் தோன்றும்**

**இந்த சத்தியத்திற்கு அடிபணிந்து, விளைவுகளை சந்திக்க ஆயத்தமாகி விட்டேன். என்னவெல்லாம் நடக்குமோ, என்ற யூகம் எனக்கு ஏற்பட்டாலும், முன்னேறிச் செல்ல அடிபணிகிறேன்......**

*நான் அஞ்சி ஓடேன்! என்னை ஒளித்துக் கொள்ளவும் மாட்டேன்! ஒரு கோழையாய் ஒரு போர்வைக்குள் மடங்கி சுருண்டிட மாட்டேன். துணிவுடன் எழுந்து, 'போருக்கு' அர்ப்பணிக்கிறேன். ஏனெனில், நான் உம்மோடு சேர்ந்து நிற்கிறேன் என்பதை தெளிவாக அறிந்து கொண்டேன்! என உள்ளம் உறுதிகொண்டேன்!*

*– A.W.டோசர்*

---

## 'இரட்சிக்கப்பட்டேன்' என கூறி, இரட்சிக்கப்படாதவர்கள்!

*கர்த்தருடைய ஊழியர் திரு.தியாகராஜ்பிள்ளை அவர்கள் ஆரம்ப காலத்தில் என்னைப் பார்த்து: "தம்பி, இரட்சிப்பட்டிருக் கிறீரா? இரட்சிப்பின் நிச்சயம் உமக்கு உண்டா?" என கேட்டார்கள். இந்த கேள்வி எனக்கு நூதனமாகயிருந்தது. என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. என் இளமையில் ஆண்டவர் என்னைச் சந்தித்து அவருக்குச் சொந்தமாக்கினபோது,* **தமது அன்பினால் என்னை நிரப்பினார்.** *நான் சுவிசேஷத்தைப் படித்தபோது அவருடைய அன்பின் பெருக்கமே என் கண்களுக்கு பெரிதாய் இருக்கக்கண்டேன்! ஆண்டவர் நமது பாவங்களை மன்னித்து, நம்மை இரட்சிக்கிறார் என்பது உண்மையாயினும், நான் அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் ஈவுகளைவிட,* **அவரையே நான் பிரதானமாகத் தேடினேன்.** *அவரே எனக்குச் சகலமுமாயிருக்கிறார். 'இரட்சிக்கப்பட்டேன், அல்லேலூயா' என்று நான் சொல்லாததைக் கண்டு கனம் தியாகராஜ் பிள்ளை ஆச்சரியப்பட்டார்கள்.*

*இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? என்னும் கேள்வி இரட்சண்ய சேனையாரிடமிருந்தே பிரதானமாக அந்நாட்களில் வெளிப்பட்டது. யாரைக்கண்டாலும் இரட்சிக்கப்பட்டிருக்கிறீரா?என்று கேட்பார்கள். இரட்சிப்பைப் பற்றி விசாரிப்பது தப்பிதமல்ல..... அதைப் பார்க்கிலும் கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவனுடைய அதிசயமான அன்பைப் பற்றிப் பேசுவதே பிரதானம்! கிறிஸ்துவின் அன்பை அறிந்தவன், அவரை ஒரு நிமிஷம்கூட மறக்கமாட்டான். அவருக்கென்றே பிழைப்பான். அவருக்கென்றே உழைப்பான். அவருக்கென்றே மரிப்பான். இரட்சிப்பு வேண்டும், மோட்சம் வேண்டும் என்று கேளாமல், கிறிஸ்துவையே பிரதானமாகத் தேடுவான். 'கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருவான்'*

*(2பேதுரு.3:18). அப்போஸ்தலர் சென்றவிடமெங்கும் கிறிஸ்துவையே பிரசங்கித்தார்கள். கிறிஸ்துவே அவர்களுக்கு இரட்சிப்பானார்.*

**இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லிக்கொண்டு, ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதல் இல்லாதவர்களைப் பார்க்கிலும், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லாதிருந்தும், கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாக்கிக்கொண்டு பிழைக்கிறவர்கள் பாக்கியவான்கள்!**

*ஆண்டவர் நமது ஜீவியத்தையே பிரதானப்படுத்திப் பேசியிருக்கிறார். ஒருவன் எப்படி ஜீவிக்கிறான்? என்பதே பிரதானம்! "இரட்சிக்கப்பட்டேன்!" என கூறிக்கொண்டு, இரட்சிக்கப்படாமலே சபையில் அமர்ந்திருப்பவர்கள் மூலமாக, கர்த்தரின் நாமம் இன்று தூஷிக்கப்படுகிறது! நமது ஜீவியம் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் வெளிச்சமாகவும், கிறிஸ்துவின் நற்கந்தமாகவும், கனிகள் நிறைந்த தாகவும் இருக்க வேண்டும்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## 'நான் கிறிஸ்தவன்' என அறிக்கை செய்திட வெட்கம் கூடாது!

*ஒரு தாழ்மையான சகோதரனை கண்டதினிமித்தம், நான் மிகுந்த மகிழ்ச்சியோடு அவரோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறாகவே கிறிஸ்தியான், தன்னை தூக்கிவிட்ட 'உண்மை யுள்ளவனோடு' ஐக்கியம் கொண்டான். தங்கள் பயணத்தில் அடைந்த அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து பேசிக் கொண்டார்கள். எப்போதுமே நாம் பெற்றிருக்கிற சாட்சியை, மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வது, அவர்களை அதிகமாய் ஊக்குவிக்கும்.*

**இந்த பூமியில், யாரைக் குறித்தும் தீது பேசாமல், தன்னுடைய ஜீவிய சாட்சியை பகிர்ந்து கொள்வதே பரலோகத்தின் சாயலாகும்!**

*நாம் பரலோகம் செல்லும்போது, ஆயிரக்கணக்கான பரிசுத்த வான்களோடு 'இவ்வாறாகவே' மகிழ்ந்து நம் சாட்சிகளை பகிர்ந்து கொள்ள காத்திருக்கிறோம். தன்னுடைய சாட்சியை துவங்கிய உண்மையுள்ளவன்: நான் பயணமாய் வந்த சமயம், எனக்கு ஏற்பட்ட சோதனை ஒரு ஸ்திரீயே ஆவாள். அவள் பெயர்* **'இச்சை மோகினி'.**

*அவள் என்னைப் பார்த்து, சிரித்து சிரித்து பேசி, கண்களை அங்குமிங்கும் படபடக்கச் செய்து, என்னை மயக்கினாள்! சோதிக்கப் பட்ட நான், வேறுதிசைக்கு வேகமாய் தப்பி ஓடினேன். அவளுடைய மோகமான சம்பாஷணைக்கு ஒரு வினாடிகூட நான் இடம் தரவில்லை. இவ்வாறு பாலிய இச்சையை 'விட்டு விலகி ஓடுவது' தேவன் நமக்கு கற்றுக்கொடுத்த சிறந்த வழி!*

*நீங்கள் எப்போதெல்லாம் ஒரு ஸ்திரீயானவள் தூய்மையற்று இருப்பதை காண்பீர்களோ.... அதை அவளின் கண்களை வைத்து கண்டுபிடிக்கக்கூடும்! அல்லது அவளுடைய ஒழுக்கமற்ற ஆடையை வைத்து கண்டு கொள்ள முடியும்! அவள் நடக்கின்ற விதத்தை வைத்தும் கண்டுகொள்ள முடியும்! அல்லது அவளுடைய பேச்சின் நயத்தை வைத்து கண்டுகொள்ள முடியும்! இதுபோன்ற 'இச்சை மோகினி' நீங்கள் வேலை செய்யும் அலுவலகத்தில் இருக்கக்கூடும் அல்லது உங்கள் உறவினர்களாயிருக்கக்கூடும் அல்லது உங்கள் வீட்டின் அருகிலுள்ள அயலகத்தாராயிருக்கக்கூடும்! அவ்வாறு நீங்கள் காணும்போது 'இவளிடத்தில் பரிசுத்தத்தின் ஆவி இல்லை' என்பதை கண்டு தூர ஓடி விடுங்கள்! இதை கண்ட அவள் கோபமடைந்தாள்.*

**"உனக்கு நல்ல மனம் இல்லை, கலாச்சார பண்பு இல்லை, இப்படியா ஓடுவது?" என கோபத்துடன் சத்தமிட்டாள். அவள் எது வேண்டு மானாலும் பேசிக்கொள்ளட்டும் என உதறிவிட்டு நான் ஓடி வந்து விட்டேன். இவர்களே தன் ஜீவனை காத்து கொண்டவர்கள். அநேகர், அவளிடத்தில் தன் ஜீவனை இழந்து பறி கொடுத்து விட்டார்கள்!**

*உண்மையுள்ளவன், தொடர்ந்து தன் சாட்சியைக் கூறும்போது 'ஒரு வயதானவரை' நான் கண்டேன்! அவன் பெயர் 'பழைய ஆதாம்'. அவன் என்னை அழைத்து, நீ என் வீட்டிற்கு வா! எனக்கு மூன்று அழகுள்ள மகள்கள் உண்டு! ஒரு மகளின் பெயர், மாம்சத்தின் இச்சை.... இரண்டாவது மகளின் பெயர் கண்களின் இச்சை, மூன்றாவது மகளின் பெயர் ஜீவனத்தின் பெருமை என கூறி வீட்டிற்கு வர கூப்பிட்டான். அவன் தொடர்ந்து கூறும்போது, என்னுடைய மூன்று பெண்களும் நல்ல கலாச்சாரத்தோடு "நீ விரும்பியபடி உன்னோடு நெருங்கி பழகுவார்கள்" என கூப்பிட்டான். கூப்பிட்ட அந்த நபர் வயது சென்றவராயிருந்தபடியால், உண்மையுள்ளவன் அவரை பார்த்து "மன்னித்துக் கொள்ளுங்கள் சார்!" நான் வர இயலாது என கூறிவிட்டான். இவ்வாறாகவே, நம்முடைய மாமாவோ அல்லது நீங்கள் மதிக்கின்ற ஒரு நபரோ, உங்களை மாம்சத்தின் இச்சைக்கோ, கண்களின் இச்சைக்கோ, ஜீவனத்தின் பெருமைக்கோ உங்களை நடத்தினால், அதுபோன்ற ஜனங்களைக் குறித்து கவனமாயிருங்கள்! அதை எதிர்த்து நில்லுங்கள்! இவ்வாறாகவே 'உண்மையுள்ளவன்' 'பழைய ஆதாமை விட்டு' ஓடினான்!*

*இருப்பினும், கோபத்தோடு மோசே உண்மையுள்ளவனை நெருங்கி "அந்த பழைய ஆதாமின் சம்பாஷணையை நீ ஏன் கவனித்து கேட்டாய்?" என ஆத்திரமுடன் கண்டித்தார். உண்மையுள்ளவன்,*

பழைய ஆதாமின் வீட்டிற்குப் போகாவிட்டாலும், அவன் மாம்ச இச்சைக்கு 'சிறிதளவு' தடுமாறியதையும், 'கண்களின் இச்சைக்கு' சிறிதளவு மனம் படபடத்ததையும், ஜீவனத்தின் பெருமைக்கு அவன் உள்ளம் சிறிதளவு ஈர்க்கப்பட்டதையும் கூட, மோசேயின் பிரமாணம், உண்மையுள்ளவனை ஆக்ரோஷமாக ஆக்கினைக்கு உட்படுத்தியது!

**அதிர்ச்சியில் திகைத்த உண்மையுள்ளவனுக்கு 'ஆண்டவர் இயேசு' வருகை தந்து மோசேயினுடைய ஆக்கினையை அகற்றி மன்னிப்பு அருளினார்!**

உண்மையுள்ளவன் தொடர்ந்து தன்னுடைய சாட்சியை கூறுகையில் **'திருப்தியற்றவன்'** என்ற பெயர் உடையவனை சந்தித்தான். இந்த திருப்தி அற்றவன், யாதொன்றைக் குறித்தும் மகிழ்ச்சியாய் இருக்கமாட்டான்! எதைக் குறித்தும் எப்போதும் முறுமுறுப்பும், குறை சொல்லுதலும் கொண்டிருப்பான். இதுபோன்றவர்களை நாம் பலமுறை சந்திக்கிறோம்! அவர்கள் எதை குறித்தாகிலும் முறுமுறுத்து கொண்டே இருப்பார்கள். நலமான காரியங்கள் நடந்த இடத்திலும், இவர்கள் முறுமுறுப்பை விட்டு விட மாட்டார்கள்! திருப்தி அற்றவன், உண்மையுள்ளவனைப் பார்த்து "இந்த இடுக்கமான வழியும் சோதனைகளும் என்னை மனம் மடிய வைத்துவிட்டது! இனியும் இந்த ஜீவ பாதை எனக்கு வேண்டாம்! நான் அழிவின் நகரத்திற்கே திரும்ப போகிறேன்" என கூறினான். அங்கே எனக்கு ஆணவம், பெருமை, உலக மகிமை ஆகிய பல நண்பர்கள் இருக்கிறார்கள்! அந்த நண்பர்களை நான், இப்போது இழந்து தவிக்கிறேன். அங்கே நான் போய்விட விரும்புகிறேன்! உடனே உண்மையுள்ளவன் "நீ போக விரும்பினால் போகலாம், நான் திரும்பி செல்வதாய் இல்லை" என மறுத்து விட்டான்.

இவ்வாறாக அநேகர், நம்மை இடறச்செய்து, இந்த வழியை விட்டு திரும்பும்படி அழைப்பார்கள். அதுபோன்ற பின்மாற்றத்தை நாம் எதிர்த்து நிற்க வேண்டும். சில சமயங்களில் 'நண்பர்கள்' பாவம் இருக்ககூடிய சில ஸ்தலங்களுக்கு அழைப்பார்கள். நாம் செய்ய வேண்டியதெல்லாம் 'அவர்களின் நட்பை முறித்து கொள்வதே அல்லாமல்' வேறு வழியில்லை.

உண்மையுள்ளவன் தொடர்ந்து தன்னுடைய சாட்சியை கூறும்போது "நான் **வெட்கமானவன்** என்ற வேறொரு மனிதனைக் கண்டேன்" என கூறினான். இவன் கிறிஸ்துவை அறிக்கை செய்வதற்கு வெட்கம் கொண்டவன்! இவன் பரலோகம் செல்ல விரும்பினான், ஜீவ பாதையில் நடக்க விரும்பினான்..... ஆனால் அவனுடைய அலுவலகத்திலோ அல்லது வேறு இடத்திலோ அவனை

சந்திப்பவர்கள் 'நீ கிறிஸ்தவன் தானே!' என கேட்டவுடன்.... ஆம் என தைரியமாய் சொல்ல அவனால் முடியவில்லை! அவனுடைய அலுவலகத்தில் உள்ளவர்கள் அவனிடம் வந்து நீ பொய் சொல்லுவதில்லையே? வேலையில் நேர்மையாயிருக்கிறாயே? எங்களைப்போல் சண்டை போடுவதில்லையே? இதற்கெல்லாம் என்ன காரணம்? என கேட்கும்போது, **நீங்கள் சற்றும் வெட்கப்படாமல் "நான் கிறிஸ்தவன்" என தைரியமாய் அறிக்கை செய்யுங்கள்!** மேலும், நீங்கள் காண்கிறபடி, மற்ற கிறிஸ்தவர்களைப்போல் நான் இருப்பதில்லை. ஏனென்றால் நான் இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக என் இருதயத்தில் ஏற்றுக்கொண்டேன்.... என அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கூறுங்கள். இவ்வாறு அறிக்கை செய்வதற்கு ஒருபோதும் வெட்கம் அடையாதிருங்கள்!

– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)

---

## 'தேவன் ஒருவரே' மறைபொருள் வெளிப்படுத்துகிறவர்!

**எ**ன் ஆசிரமத்தில், வேதபாடம் போதிக்கும் நேரத்தில், சில வசனங்களைக் குறித்த வெளிச்சம், என்னைச் சுற்றி அமர்ந்திருந்த ஆசிரமத்து மக்களை மகிழச் செய்தது. கூட்டம் முடிந்ததும் என்னை ஒரு அபூர்வ உணர்வோடு காண்பார்கள். அவ்வேளையில் பல்வேறு உணர்வுகள் என்னைத் தாக்கின! கடைசியாக, என்னை அமரச் செய்த தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தை எனக்கு கூறியதெல்லாம் "நீ ஆண்டவருடைய **அபாத்திரமான ஊழியக்காரன்**" எனக்கூறி நினைவுபடுத்தியதேயாகும்!

நான் உடனே மனம் உடைந்து, தெளிவு பெற்றேன். இப்போது ஊழியம் செய்த யாதொன்றிற்கும் 'நான் பாத்திரன் அல்ல' என்ற உணர்வு என்னைத் தாழ்த்தியது! தேவ ஞானத்திற்கு நான் மெய்யாகவே சூனியம் கொண்டவள். ஆகவே, பரத்திலிருந்து உண்டாகி எனக்குள் அந்த ஞானம் வந்து இறங்கவில்லையென்றால், அல்லது பரமபொருள் எனக்குள் வெளிப்பாடாய் கிடைக்கவில்லையென்றால், மற்றவர்களைப் போலவே நானும் வெறுமையாய் இருந்திருப்பேன்!

ஆகவே, சகலமும் அவருடைய கிருபை என்பதை நான் உணர்ந்தவுடன், என்னை தாழ்பணிந்து "நான் பாத்திரன் அல்ல, நீரே பாத்திரர்!" நீர் எனக்கு வெளிப்படுத்தியதை வாங்கி, பிறருக்கு கொடுத்தேன், அவ்வளவுதான்! ஆகவே "நான் அபாத்திர ஊழியன்" என என்னை ஒப்புக்கொடுத்து, அவரை மகிமைப்படுத்தினேன்.

நினைப்பதற்கும், ஆராய்வதற்கும் முடியாத மறைபொருளை

*அவர் ஒருவரே நமக்கு வெளிப்படுத்த முடியும். இருளிலிருக்கிறதை அவர் ஒருவரே அறிவார்! பரிசுத்தாவியின் அபிஷேகம் இல்லாமல், தேவனுடைய இருதயத்தை ஒருவனும் அறிந்து கொள்ள இயலாது! தேவனையும், தேவ பக்திக்குரிய அனைத்தையும் அவர் ஒருவரே வெளிப்படுத்துகிறார் என்ற தாழ்மை உணர்வு இல்லாமல்,* **அகந்தையின் நிழல்,** *சிறிது என்மேல் விழுந்தாலும், "கல்வாரியின் அன்பை" இன்னமும் அறியாத மூடனாகவே இருந்திருப்பேன்! கர்த்தர் ஒருவருக்கே மகிமை உண்டாவதாக!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## "பரிசுத்தாவி அபிஷேகம் பெற்றேன்" எனது சாட்சி!

*கடற்படை அதிகாரியாய் பணியாற்றிய என் கணவர் (சகரியா பூணன்) "கர்த்தருக்கு ஊழியம் செய்யும்பொருட்டு" இந்திய கடற்படையிலிருந்து ராஜினாமா செய்து விட்டார்! அந்நாள் தொடங்கி, யாதொரு வருமானத்தையும் அவர் சம்பாதிக்கச் செல்ல வில்லை! ஆகவே எங்கள் எல்லா தேவைகளுக்கும் 'கர்த்தரையே முழுமையாய் நம்பி வாழ' நாங்கள் இருவரும் சேர்ந்து ஜெபித்தோம். ஆனால், ஒரு நிரந்தர வருமானம் இல்லாமல் ஜீவனம் செய்வது எவ்வளவு கடினம் என்பதை, நான் வெகுசீக்கிரத்தில் உணர்ந்து கொண்டேன்!*

*ஒரு வாடகை வீடு அமைத்துக் கொள்வதற்குப் போதுமான பணம்கூட எங்களிடம் இல்லை! ஆகையால், என் கணவரின் பெற்றோர்களுடைய வீட்டிலிருந்த 'ஒரு சிறு அறையில்' நாங்கள் ஜீவனம் செய்தோம். ஒரு வருடம் முடிந்த அந்த காலத்தில், எங்கள்* **முதல் மகன்** *பிறந்தான்! இப்போதோ, எங்கள் பொருளாதார தேவை மிகவும் அதிகரித்து விட்டது. எங்களுக்கு காணிக்கையாய் கிடைத்த கொஞ்சம் பணத்தை வைத்து ஜீவனம் செய்வது கடும் போராட்டமாய் இருந்தது!*

*ஜூன் 1968 நான் தேவனுடைய ஊழியத்தில் சுறுசுறுப்பான ஆர்வம் கொண்டவளாய்தான் இருந்தேன். திருமணம் ஆன பிறகோ, வீட்டில் அமர்ந்து விட்டேன்! அந்த வீடும், என் சொந்த வீடு அல்ல! நானோ அந்த சிறிய அறையில், என் கைக்குழந்தையுடன் அமர்ந் திருந்தேன். கையிலோ, மிகக்குறைவான பணமே வைத்திருந்தேன். ஏதோ ஒரு* **"அதைரியம்" என்னை ஆட்கொண்டு,** *கர்த்தரை விட்டே என் மனதில் தூர விலகிப்போனேன். நான் வெளித்தோற்றத்தில் எந்த தவறும் செய்யவில்லை என்பது உண்மைதான். மேலும், எல்லா சபை கூட்டங்களுக்கும் தவறாமல் சென்று வந்தேன். ஆனால்.... என்*

*உள்ளான வாழ்க்கையிலோ 'பரிதாப நிலையில்' இருந்தேன்!*

**சகரியா பூணனை திருமணம் செய்ய தேவன்தான் நடத்தினார் என்பதை நன்கு அறிவேன்! ஆனால், நாங்கள் ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறோம்? என ஆச்சரியப்பட்டேன்! ஜெபிக்கவும் தோன்றவில்லை.... வேதம் வாசிக்கவும் முடியவில்லை. இதோடு சேர்ந்து, என் குழந்தை இரவெல்லாம் அழுது கொண்டே இருந்ததால்.... தொடர்ச்சியான பெலவீனம் கொண்டவளாய் இருந்தேன்.**

*இவ்வித கொடிய வறட்சியான சோர்வின் நாட்களில், நான் இதுவரை சந்தியாத ஒரு சகோதரி என் வீட்டிற்கு வந்தார்கள். அந்த சகோதரி "நாம் சேர்ந்து ஜெபிக்கலாமா?" எனக் கேட்டார்கள். அதற்கு சம்மதித்து என்னுடைய படுக்கை அறைக்குச் சென்று ஜெபித்தோம். மிகுந்த* **பசுமையும் உற்சாகமும்** *நிறைந்த அந்தப் பெண்ணின் ஜெபம் எனக்கு அதிக ஊக்கம் அளித்தது! அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட பசுமையான உற்சாகம், என்னுடைய ஜீவியத்திலும் வேண்டுமென்ற வாஞ்சை எனக்கு ஏற்பட்டது! அடுத்த முறை, அந்த சகோதரியின் வீட்டில் வந்து ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, அடுத்த முறை, என் குழந்தையை தூக்கிக் கொண்டு அந்த சகோதரியின் வீட்டிற்குச் சென்றேன். நாங்கள் இருவரும் தரையில் முழங்கால் படியிட்டு, என் குழந்தையை முழங்கால்படியிட்ட எங்கள் இருவருக்கும் நடுவில் படுக்க வைத்த பிறகு ஜெபிக்கத் தொடங்கினோம். அப்போது நான், "ஆண்டவரே, என் வாழ்க்கையில் ஏதோ சம்பவித்து விட்டது. ஒரு காலத்தில் நான் உம்மோடு அவ்வளவாய் நெருங்கி வாழ்ந்தேன். ஆனால் இப்போதோ உம்மை விட்டு தூரமாய் நிற்கிறேன். தயவாய் எனக்கு இரங்கி,* **உம்மண்டையில் என்னை இழுத்துக் கொள்ளும்**" *என மனபாரத்துடன் ஜெபித்தேன்.*

*அந்த ஜெப வேளையில், நான் சிலரிடம் வைத்திருந்த தவறான மனநோக்கங்களையெல்லாம் ஆண்டவர் எனக்கு காண்பிக்கத் துவங்கினார். நானும், என் தந்தையும்கூட ஒருவரைவிட்டு ஒருவர் தூரமாய் இருந்தோம். என் கணவருடைய பெற்றோர்கள் என்னிடத்தில் பிரியமாய் இருந்தாலும், "நானோ அவர்களுடைய வீட்டில்" இருந்தபடியால்,* **மகிழ்ச்சியிழந்த** *பெண்ணாகவே இருந்தேன். இந்த நிலையில், கர்த்தர் என் கண்களைத் திறந்தார்! என்னைப் பார்த்து "பிரச்சனைகள் மற்றவர்களிடத்தில் இல்லை.... உன்னிடத்தில்தான் உண்டு!" எனக் கூறிவிட்டார். உடனே நான், கதறி அழத்தொடங்கி விட்டேன். "ஆண்டவரே என்னை மன்னியும்! நான் மோசமான பாவி. வெளித்தோற்றத்தைப் பார்த்து, ஜனங்கள் என்னை நல்லவள் என்று*

எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், என் உள்ளத்திலோ கசப்பு நிறைந்தவளாகவே இருக்கிறேன்!" என கண்ணீரோடு ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில் **'திடீரென்று' தேவன் என் இருதயத்தைத் தொடுவதாக உணர்ந்தேன்.** தேவனுடைய கரத்தில் அமர்ந்திருக்கும் ஒரு சிறு பிள்ளையைப்போல் எனக்குத்தோன்றியது. அன்புடன் தூக்கி வைத்துக்கொண்ட அவரது கரத்தின் ஆறுதலில், என் கண்ணீரெல்லாம் உடனே நின்று விட்டது! மீண்டுமாய், என் இருதயத்தை சந்தோஷத்தாலும் சமாதானத்தினாலும் தேவன் நிறைத்தார்!!

**மிகுந்த நன்றியுடன் நான் தேவனை துதித்துக் கொண்டிருந்த சமயம் "நான் வேறு பாஷையில் பேசிக் கொண்டிருப்பதைப்போல் உணர்ந்தேன்" அது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏனெனில், நான் பிரதரன் சபையிலிருந்து வந்தவள். அந்நிய பாஷை பேசும் வரத்தை நாங்கள் விசுவாசிப்பதில்லை.**

ஆகவே, ஏதோ வேறு பாஷையில் பேசிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமாய் இல்லை! உடனடியாக, நான் மீண்டும் ஆங்கிலத்தில் ஜெபிக்கத் தொடங்கினேன். இப்போது, ஆங்கிலத்தில் ஜெபிப்பதுதான் எனக்குப் போராட்டமாய் இருந்தது! தேவன் தந்த புதிய பாஷையில் ஜெபித்திடவே எனக்கு எளிதாய் இருந்தது! எனவே, என் முழு இருதயத்தையும் ஆண்டவருக்கு முன்பாக ஊற்றி, **அந்த புதிய பாஷையில் தேவனை மனதார துதிக்கத் தொடங்கினேன்.** ஆம், நான் இந்த உலகத்தில் இல்லாதது போலவே என் ஆவியில் உணர்ந்தேன்! சொல்லி முடியாத சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் என் வீட்டிற்குத் திரும்பி, நடந்த அனைத்தையும் என் கணவரிடம் விவரித்தேன்.

அந்த நாட்கள் தொடங்கி, என் ஜீவியத்தில் ஏற்பட்ட உண்மையான மாற்றத்தை என் கணவரும் கண்டார்! ஆம், என் வாழ்வில் ஒரு **புத்துணர்ச்சி பெற்றேன்** என்றே கூற வேண்டும். வறண்ட பாழ்நிலமாய் இருந்த என் இருதயம், திடீரென்று பசுமை நிறைந்ததாய் மாறியது!! அந்த நாளில் நான் பெற்ற சந்தோஷமும் சமாதானமும் இன்றுவரை என்னை விட்டு நீங்கவில்லை. **ஓர் ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு,** என்னை நடத்திய பரிசுத்தாவியானவருக்கு நான் மிகுந்த நன்றியுள்ளவளாய் இருக்கிறேன்! அந்நாள் தொடங்கி, ஜனங்களிடமிருந்து எண்ணற்ற உபத்திரவங்களையும் எதிர்ப்புகளையும் குடும்பமாய் சந்தித்திருக் கிறோம். ஆனால் அவை யாதொன்றும் என் ஆண்டவர் மீது நான் கொண்டிருந்த உறவை பிரித்திட இயலவில்லை!

எங்கள் நான்காவது பையன் பிறந்தவுடன் மூட்டு வாத வலியால், எப்போதும் படுத்திருக்க வேண்டிய நிலையில் நான் அவதிப்பட்டேன்.

*அந்த நிலையில்கூட என் இருதயம் மகிழ்ச்சியாலும் சமாதானத்தினாலும் நிறைந்திருக்க தேவன் கிருபை செய்தார். வெகு சீக்கிரத்தில், ஒரு மாதத்திற்குள்ளாகவே நான் அற்புதமாய் சுகம் பெற்றேன்!*

*1975-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், எங்கள் வீட்டில் கர்த்தர் தமது சபையை கட்டிடத் துவங்கினார். அதற்குப் பிறகுதான், இந்தியாவின் மற்ற கிறிஸ்தவர்களிடமிருந்து ஏராளமான கடும் எதிர்ப்புகளை நாங்கள் சந்திக்க வேண்டியதாயிருந்தது. அதே சமயம், எங்கள் குடும்பத் தேவைக்கும் அதிகமாய் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது! இதுபோன்ற அனைத்து நெருக்கமான சூழ்நிலை மத்தியிலும், தேவன் எனக்குத் துணையாய் நின்றும், என் ஜெபங்களுக்கு பதிலளித்தும், திடப்படுத்தினார்!*

**இவ்வித கடினமான சூழ்நிலை மத்தியில்தான் நான் தேவனை இன்னும் அதிகமாய் நெருங்கி, அவரை என் சொந்த தகப்பனாய் நான் ருசித்தேன்!!**

*இந்த நாட்களில்தான், கிறிஸ்துவுக்குள் நியமனம் செய்யப்பட்ட புதிய உடன்படிக்கையின் மாபெரும் சத்தியங்களை நான் காணும்படி தேவன் என் கண்களைத் திறந்தார். அவர் எனக்கு* **பரிசுத்தாவியின் வல்லமையை தந்ததன் நோக்கமே:** *"இனியும் நான் எனக்காக வாழாமல் அவருக்காக மாத்திரமே வாழும்படிக்கு" பரிசுத்தாவியானவரைத் தந்தருளினார் என காண்பித்தார். இவ்வாறாக, தேவன் என்னை "இயேசுவைப் போலவே" மாற்ற விரும்புகிறார் என்பதையும் கண்டேன்! அவ்விதமே, என்னை படிப்படியாய் மாற்றவும் செய்தார்! அவர் எனக்கு பொறுமையை கற்றுத் தந்தார்! என் கோபத்தை மேற்கொள்ள உதவி செய்து, என் இருதயத்தை ஜனங்கள் மீது கொண்ட அன்பினால் நிறைந்திருக்கச் செய்தார்!!*

*– ஆனி சகரியா பூணன்*

---

## ஜனசங்க 'CLUB' ஐக்கியத்தின் முடிவு, பேரழிவு!

*நீங்கள் தேவனோடு 'எந்த பிரமாணமும்' இல்லாதவர்களாயிருந்தால், மற்றவர்களோடு கொண்ட ஐக்கியத்தில் 'உங்கள் சொந்த உடன்படிக்கையை' நீங்கள் ஏற்படுத்த வேண்டியிருக்கும். அதன்படி "என் முதுகை நீ சொறிந்தால், உன் முதுகையும் நான் சொறிந்து விடுவேன்! நீ என்னிடம் நயமாய் நடந்து கொண்டால் நானும் உன்னை நயமாய் நடத்துவேன். ஆனால், நீ என்னிடம் நயமாய் நடப்பதை நிறுத்திக் கொண்ட அதே நேரத்தில், உன்னோடு கொண்ட ஐக்கியத்தை நிறுத்திக் கொள்வேன்" என்பதாகவே இருக்கும். அநேக விசுவாசிகள் பிறர்மீது கொண்டிருக்கிற ஐக்கியம் 'இந்த*

*நிலையில்தான்' இருக்கிறது.*

*ஜன சங்கம் (Club), இன்னும் அதிகமான பூமிக்குரிய சிலாக்கியங்களையும் உங்களுக்குத் தந்திடும். நீங்கள் "சபை கான்ப்ரன்ஸ்" பங்கு பெறலாம்! உங்கள் பிள்ளைகள் அங்கு கூடிவரும் பிள்ளைகளோடு உறவாடி ஆனந்திக்கலாம்! அங்கிருந்தே பெண் கொண்டும், பெண் கொடுத்தும் திருமணங்கள் செய்யலாம்! உங்கள் காலத்தின் முடிவில், ஒரு சிறந்த அடக்க ஆராதனையும் பெற்றுக் கொள்ளலாம்.... போன்ற சிலாக்கியங்களேயாகும்!*

*விசுவாசிகள், இதுபோன்ற நட்பை வைத்து கட்டப்படுவார்கள் என்றால், அவர்கள் குறுக்கு பலகைகளின் குவியல்களாய் இருப்பார்கள். அவர்களில் சிலர் கிறிஸ்துவோடு கொஞ்சம் தியானம் கொண்டிருப்பார்கள், ஆகிலும் அந்த செங்குத்து மரம் (தேவனோடு கொண்ட உறவு) அதிகபட்சத்தில் சிறிய அளவாயிருக்கும்! காலாவட்டத்தில், செங்குத்து மரமே அங்கு காணப்படுவதில்லை.*

*நீங்கள் வெறும் 'ஒரு நல்ல கிறிஸ்தவ ஜன சங்கத்தில்' ஒரு பங்காயிருக்கிறீர்கள் என்பதை கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் நியாயஸ்தலத்தின் நாளில் 'கண்டுணர்ந்து' அதிர்ச்சி அடையாதிருக்க கவனமாயிருங்கள்!*

**உங்கள் கணவனோ அல்லது மனைவியோ அல்லது வேறு யாரோ 'உங்களை இழுத்து கொண்டு வந்ததினிமித்தம்' நீங்கள் ஒரு சபையில் சேர்ந்தீர்களா? அந்த சபையில் "ஜனசங்க-சூழல்" (Club) இருப்பதைக் கண்டும், அங்கு நீங்கள் நல்ல பிரசங்கங்களைக் கேட்கலாம் என்றும், நீங்கள் தேவையில் இருக்கும்போது மற்றவர்களின் உதவியை பெறலாம் என எண்ணியும் சேர்ந்தீர்களா?**

*ஒரு நல்ல போதகத்தை நீங்கள் கேட்கும்போது, அதை நீங்கள் நன்கு புரிந்து கொண்டதினிமித்தம், உங்களை ஆவிக்குரியவர்களாக எண்ணி எளிதில் வஞ்சிக்கப்படமுடியும்.*

*அதனிமித்தம் உங்கள் சபையின் போதகங்கள் மற்ற சபைகளின் போதகங்களை விட மிக உயர்ந்தது என! உங்களையே பாராட்டி மெச்சிக் கொள்ளமுடியும். அதே சமயத்தில் ஓர் செங்குத்து பலகையான "***கிறிஸ்துவின் மீது கொண்ட தியானம்***" உங்கள் ஜீவியத்தில், முற்றிலும் இல்லாததா யிருக்கும்! அப்படி இருந்தால் நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக "தேவனுடைய ராஜ்ஜியத்திற்கே புறம்பாய் வெளியே நிற்பதை" காணும் துயரத்திற்கு ஆளாவீர்கள்.*

*– சந்தோஷ் பூணன்*



# ததேயு அப்போஸ்தலன்,

## இயேசுவிற்காக 'வாளால்' அறுக்கப்பட்ட சீஷன்!

(AD 70)

இந்த ததேயுவிற்கு, லெபேயு என்ற மறுபெயரும் உண்டு. அந்த பெயருக்கு 'நெஞ்சுறுதி கொண்டவன்' என அர்த்தமாகும். இந்த சீஷனைக் குறித்து அதிகமாய் சுவிசேஷங்களில் பேசப்படவில்லை! ஆகிலும் **இயேசுவின் தெய்வ அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட இந்த சீஷன்** "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" என்ற கட்டளையை மனதார ஏற்று, சுவிசேஷத்தை வல்லமையாய் பிரகடனம் செய்தார். பெர்ஸியா, அர்மினியா ஆகிய தேசத்தை சுவிசேஷத்தினால் நிரப்பினார். தன் சக இயேசுவின் சீஷர்களில் பெரும்பாலோர், கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சியாய் மரித்த செய்தியை கேட்ட அவர், உள்ளம் பரவசமடைந்தார்! அவர்களைப்போல் தானும் **இரத்த சாட்சியின் கிரீடம்** சூட்டப்படுவது எத்தனை பாக்கியமாயிருக்கும் என வாஞ்சை கொண்டார்.

பெர்ஸியா நாட்டில் சுவிசேஷம் பரவி வந்த எழுப்புதல் நடுவே, ததேயுவுக்கு துன்பங்களும் பெருகியது. பெர்ஸியா நாட்டு இளவரசன் "வெரர்டக்" (Prince Verardach) ததேயு மூலமாய் கேட்ட சுவிசேஷத்தால் மனம் மாறினான். எண்ணற்ற மக்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். ஒருமுறை, விக்கிரகாராதனை பூசாரிகள் ததேயுவை அரசருக்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்தினார்கள்! மிகுந்த அமைதியுடன் நின்ற ததேயு மீது, கோபமடைந்த பூசாரிகள் தங்கள் பையில் வைத்திருந்த விஷப்பாம்புகளை ததேயுவின்மீது தூக்கி எறிந்தார்கள். அந்த பாம்புகளோ பூசாரிகளிடத்தில் திரும்பி வந்து அவர்களைக் கடித்தது! அங்கிருந்த போர் வீரன் கீழே இருந்த பாம்புகளைத் தூக்கும்படி ததேயுவிற்கு கட்டளையிட்டான். அந்த பாம்புகளோ, கையில் எடுத்த ததேயுவை கடிக்கவில்லை. அதே பாம்புகளை பூசாரிகள் வாங்கும்படி அரசன் கட்டளையிட்டபோது, அதை எடுத்த பூசாரிகளை பாம்புகள் கோபாவேசத்தில் கடித்துக் கொன்றது. இதைக் கண்ட திரளான ஜனங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். ததேயுவின் வாஞ்சையின்படியே பிற்காலத்தில் வந்த அரசனால் 'தீவிரவாதி' என ததேயு குற்றஞ்சாட்டப்பட்டு 'உச்சந்தலையிலிருந்து இரண்டாக கொடூர ரம்பத்தினால்' அறுக்கப்பட்டு, இரத்த சாட்சியானார்.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ‘வாழ்வின் சுமை கொடிது’ அதை ஆண்டவரிடம் தந்திடு!

தனது முதுகின்மேல் மிகப் பளுவான சுமை ஒன்றைச் சுமந்து கொண்டு, கஷ்டத்தோடு ரஸ்தாவில் ஒரு மனிதன் நடந்துகொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற இரக்கமுள்ள வாகன ஓட்டி ஒருவன், தனது வாகனத்தை அன்புடன் நிறுத்தி அவனை அதில் ஏற்றிக்கொண்டு சென்றான். வாகனத்தில் ஏறிக்கொண்ட அவன் அங்கும் தனது பழுவைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ட அந்த வாகன ஓட்டி வியப்புடன் “உனது பளுவை வண்டிக்குப் பின்னால் வைத்துவிட்டு நிம்மதியாக நீ அமர்ந்திருக்கலாமே?” என்று அவனிடம் சொன்னான். “ஓ, அது சரியல்ல, என்னைத்தான் உங்கள் வாகனம் சுமந்து வருகிறதென்றால் எனது சுமையையும் கூடச் சுமந்து வரும்படியாக நான் உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்” என்றானாம்! நம்முடைய வாழ்க்கையின் பாரச்சுமைகளை ஆண்டவர் பேரில் வைக்காவிடில் நாமும்கூட இந்தப் புத்தியற்ற மனிதனைப் போலவேதான் நடந்து கொள்ளுகின்றோம்!

இந்தப் பாழ் உலக வாழ்வின் சுமை கொடியது! அதை ஒரு வாலிபன் தன் ‘சிற்றின்ப சேற்றில்’ உணரமாட்டான்! ஆனால், வாலிபம் கடந்து செல்கையில் “அவன் சுமையை” மனைவி, மக்கள், பெற்றோர், உற்றோர்..... ஆகிய, இந்த உலகில் உள்ள ஒருவராகிலும் சுமந்து உதவிட இயலாது! “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் என்னிடத்தில் வாருங்கள்!” என்ற அழைப்பை ஏற்று, வாலிபனே இன்றே அவரிடம் வந்துவிடு! அவர் உனக்கு இரட்சகர் மாத்திரமல்ல, உன்னை விசாரித்து நடத்தும் “ஆண்டவராகவும்” இருக்கிறார். இன்று முதல் அவரை ‘ஆண்டவராய்’ ஏற்று உன் சுமையை அவர் மீது வைத்து, நித்திய பாதுகாப்பை பெற்றுக்கொள்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.